الدرس الثامن
الجنة ونعيمها

பாடம் - 8
சுவனமும் அதன் இன்பங்களும்

சொர்க்கம் என்பது கண்ணியமான நிரந்தரமான உலகமாகும். தன் நல்ல டியார்களுக்காக அல்லாஹ் அதை தயார் செய்துள்ளான். அதில் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதனின் உள்ளத்திலும் உதித்திராத பாக்கியங்கள் உள்ளன.

﴿فَلَا تَعْلَمُ نَفْسٌ مَا أُخْفِيَ لَهُمْ مِنْ قُرَّةِ أَعْيُنٍ جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ﴾ [السجدة:١٧]

அல்லாஹ் கூறுகிறான்:'அவர்கள் செய்த(நற்) செயல்களுக்குக் கூலியாக கண்குளிரும் வகையில் அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளதை எவரும் அறியமாட்டார்.' (32:17)

சொர்க்கம் பல ஏற்றத்தாழ்வு உடைய பலதரப்பட்ட அந்தஸ்து, படித்தரங்களைக் கொண்டதாகும். அவற்றில் (ஏக இறைவனை) நம்பிக்கை கொண்டவர் களின் தங்குமிடங்கள் அவரவரின் செயல்களைப் பொறுத்து அமையும்.

﴿يَرْفَعِ اللهُ الَّذِينَ آمَنُوا مِنْكُمْ وَالَّذِينَ أُوتُوا العِلْمَ دَرَجَاتٍ﴾ [المجادلة:١١]

அல்லாஹ் கூறுகிறான்:'உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும் கல்வி வழங்கப் பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான்.' (58:11)

சொர்க்கத்தில் அவர்கள் விரும்பியவற்றை உண்ணவும் பருகவும் செய்வார்கள். அதில் மாற்றமடையாத நீராறுகளும், சுவை கெட்டுப்போகாத பாலாறுகளும், தூய்மையான தேனாறுகளும், அருந்துபவர்களுக்கு இன்பம் தரும் மது ஆறுகளும் இருக்கும். அவர்களின் மது உலகத்திலுள்ள மதுவைப் போன்று இருக்காது.

﴿يُطَافُ عَلَيْهِم بِكَأْسٍ مِنْ مَعِينٍ ، بَيْضَاءَ لَذَّةٍ لِلشَّارِبِينَ،لَا فِيهَا غَوْلٌ وَلَا هُمْ عَنْهَا يُنْزَفُونَ﴾ [الصَّفات: ٤٥ -٤٧]

அல்லாஹ் கூறுகிறான்: 'ஊற்றிலிருந்து நிரப்பப்பட்ட குவளைகள் அவர்களைச் சுற்றி வரும். (அது) வெண்மையானதும் அருந்துவோருக்கு இன்பம் அளிப்பதும் ஆகும். அதில் எந்தக் கேடும் இல்லை. அதனால் அவர்கள் மதிமயக்கப்படவும் மாட்டார்கள்.' (37:45,46,47)

சொர்க்கவாசிகளுக்கு சொர்க்கத்தில் 'ஹூருல் ஈன்' எனும் பெண்கள் மண முடித்து வைக்கப்படுவார்கள்.

عن أَنَسِ بْنَ مَالِكٍ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قال: وَلَوْ أَنَّ امْرَأَةً مِنْ أَهْلِ الْجَنَّةِ اطَّلَعَتْ إِلَى أَهْلِ الْأَرْضِ لَأَضَاءَتْ مَا بَيْنَهُمَا وَلَمَلَأَتْهُ رِيحًا (خ/ ٢٧٩٦)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'சொர்க்கத்துப் பெண்களில் ஒருத்தி இப்பூமியில் உள்ளவர்களை எட்டிப் பார்த்தால் வானத்திற்கும், பூமிக்கும் இடைப்பட்ட பகுதிகளைப் பிரகாசிக்கச் செய்திடுவாள். அவற்றில் நறுமணம் வீசச் செய்வாள்'. (புகாரி-2796)

சொர்க்கவாசிகளின் மிகப் பெரும் பாக்கியம் அல்லாஹ்வைப் பார்ப்பதாகும். சொர்க்கவாசிகள் மல ஜலம் கழிக்கவோ, மூக்குச் சிந்தவோ, உமிழவோ மாட்டார்கள். அவர்களின் சீப்புகள் தங்கமாகவும் வியா;வை கஸ்தூரியாகவும் இருக்கும். அவர்களின் இவ்வருட்பாக்கியம் முடிவுறாத, குறைந்திடாத நிரந்தர பாக்கியமாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: مَنْ يَدْخُلُ الْجَنَّةَ يَنْعَمُ لَا يَبْأَسُ لَا تَبْلَى ثِيَابُهُ وَلَا يَفْنَى شَبَابُهُ (م/ ٢٨٣٦)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: 'சொர்க்கம் செல்பவர் இன்பம் துய்த்திடுவார். சிரமப்பட மாட்டார், அவரது ஆடை இத்துப்போய்விடாது, அவரது வாலிபம் அழிந்துவிடாது.' (முஸ்லிம்-௨௮௩௬)

சொர்க்கவாசிகளின் குறைந்த பாக்கியம் உலகிலுள்ள இன்பங்கள் அனைத்தும் பத்துமுறை வழங்கப்படுவதை விடவும் சிறந்ததாகும். இது நம்பிக்கை கொண்டோரில் நரகிலிருந்து இறுதியாக வெளியேறுபவருக்கு கிடைக்கும்.